ஸ்ரீ

பரதேவிதுணை.

# வள்ளியம்மன்

## சோபனம்.

இது

அலமேலுஅம்மாளால் இயற்றப்பட்டு

கல்ப்பாத்தி

வித்யாகல்பதரு அச்சுக்கூட்டத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ராக்ஷஸ வரு

PALGHAT.

1915

இதன்விலை அணா 1

# வள்ளியம்மன் சோபனம்.

## கணபதி துதி.

தேவாதிதேவன் சிறைபிடித்து
திருகரத்தில்வடிவேல் பிடித்து
கானகத்தில் லீலைசெய்தது சொல்லிட
ஆனைமுகன் துணைகாப்பாமே

## 1—வது கட்டம்

1925 : 417
145

சந்திரமாய் வடிவேல்பிடித்து
திருச்செந்தூரில் வந்து அவதரித்து
வந்தவினைகளைவேரறக்கும் ஸ்கந்தா
செந்தமலர்பாதம் தன்னில்வைத்து
ஸந்ததம்எந்தனை காத்தருளும்
சொந்தபக்தாளுடன் சேர்த்தருளும்
சிந்தைகவலையை தீர்த்தருளும்
உந்தன்பன்னிருகண்ணால் பார்த்தருளும்
சீதனைபாக்கியத்தை தாருமைய்யா
இன்னம்ஜன்மம் எடுக்காமல்காருமய்யா
காலபயமறுள் தாளுமைய்யா
கருணாரஸாமிருதத்தை தாருமைய்யா

மெத்தசிரியோன் செப்புமொழிகளில்
தப்பிதங்கள் இருந்தாலும் பெத்ததாய்
தந்தைதன் குற்றம் ஸஹித்தபோல்
எந்தன்பிழையை பொறுத்தருளும்
ஸச்சதானந்தனே உன்சரணம்
நிதயஸ்வரூபனே உன்சரணம
நிர்க்குணபாலனே உன்சரணம்
சரவணபவனியே உன்சரண
தாமோதராமுருகா சரணம்
தாஸஜனப்ரியனே சரணம்
ஷண்முகநாத உன்சரணம்
தேவர்கள் நாலெசொல்லிமுடியாது
இந்ததிருக்-லியாண மகிமைதன்னை
ஏதோதெரிஞ்சமட்டுக்கும் ஸ்துதிசெய்வேன
எந்தனுக்குதுணை வந்தருளும்
கானகத்தில்ஒருமான் வயற்றில்வந்து
வாவியர்ய்வந்து அவதரித்து
பூங்கரத்தின்மீதில் காவல்கொண்டு
ஜகனைதனும்வேறெவடிவுகொண்டார்
தெனைபயறுகளைகாத்து
வள்ளியும்தனித் திருக்குறவேலையிலே

எனத்தார் அறியாதே மாலையிடவந்த
மகிமையைசொல்லுறேன் கேள்ஸகியே

## 2—வது கட்டம்.

வாருரோஜந்தூர்வேலர் எந்தன்ஸகியே
வள்ளிமேலேமோஹங்கொண்டு
பாராதிவர்தன்னிலே எந்தன்ஸகியே
பார்த்ததில்லை இவ்வாடிவை
ஆராலும்சொல்லபோமோ எந்தன்ஸகியே
அய்யன்திருவடிவை
எவராலும்சொல்லபோமோ எந்தன்ஸகியே
இம்பவடிவேல்முருகா
வள்ளிமேல்மோஹம்கொண்டார் எந்தன்ஸகியே
வளச்செட்டிவேஷம் கொண்டார்
மாரில்சுமந்துகொண்டார் எந்தன்ஸகியே
மங்கயாருக்கேத்தவளை
தோளில்சுமந்துகொண்டார் எந்தன்ஸகியே
தோகயாருக்கேத்தவளை
பச்சைவயிரமெல்லாம் எந்தன்ஸகியே
பாங்காய்பதித்தவளை
சிகப்புவயிரமெல்லாம் எந்தன்ஸகியே
சேர்த்ததில்பதித்தவளை

அக்யான இருள்பறக்கும் எந்தன்ஸகியே
ஆதித்யன்உதித்தவளை
விதம்விதம்வளைகள்கொண்டு எந்தன்ஸகியே
வந்தார்வடிவேல்முருகன்
கோட்டயில்பிறந்தவளே எந்தன்ஸகியே
கொம்பனைதன்னால்வைத்து
காட்டில்பிறந்தவள்மேல் எந்தன்ஸகியே
தேட்டமாககொண்டாரடி
வளைகள்வளைகளென்று எந்தன்ஸகியே
வந்தார்வடிவேல்முருகன்
வளைகளென்றுசப்தம்கேட்டு எந்தன்ஸகியே
வந்தாள் வள்ளிவாசலிலே

## 3—வது கட்டம்.

பாத்துமந்தவள்ளியம்மன் பைங்கிளியும்வாய்துறந்து
வாரும்வளச்செட்டியாரே வந்திறங்கும்பந்தலிலே
எந்தவூருஎந்ததேசம் எங்கிருந்துஎங்கேபோறீர்
இவ்வனத்தில்எங்கேவந்தீர் என்னவளைகொண்டுவந்தீர்
வடக்குநல்லவழிதூரம் வளைகள்இப்போவிற்றுகர்லம்
பரமசிவன்செட்டிமகன் பாலசுப்பிரமண்யன்செட்டி
எந்தன்வளைகளெல்லாம் இன்னாட்டில்வளைகளென்று
அன்னாட்டில்டம்பயற்க்கு ஆவலாய்அடுக்குமவளை

இந்திரலோகமெல்லாம் இந்திராணி அடுக்கும்வளை
எந்திழயேஉந்தன் திருகைகளுக்குஏற்றவளை
பச்சைவயிரமெல்லாம் பாங்காகபதித்தவளை
இச்சயில்லாபெண்களுக்கு இச்சகள்க்குஅடுக்கும்வளை
செகப்புவயிரமெல்லாம் சேர்த்ததில்பதித்தவளை
எந்திளயேஉந்தன் திரு கைகளுக்குஏற்றவளை

## 4—வது கட்டம்.

பணத்துக்குஆறுவளை பைங்கிளியே விற்றுவறேன்
கொணத்துகுடாறுவளை கோகிலமேகூட்டித்தறேன்
காசுக்குரண்டுவளை தேசமெல்லாம் விற்றுவறேன்
பேச்சுகுடாறுவளை பெண்மணியேகூட்டித்தறேன்
காசுமில்லைபணவுமில்லை கடம்தறவாள் ஆருமில்லை
வாஸமுடன்தனைவெறுத்து நேசமுடன் கார்த்துவறேன்
நாழியுரிதினைகள்தறேன்நாலுரண்டுவளைகள்தாரும்
உழக்குஉரிதினைகள்தறேன் ஒன்றுரண்டுவளைகள்தாரும்
நாழிஉரி தினைகள்க்கெல்லாம் நானவளைகள்விற்பதில்லை
உழக்குஉரிதினைகள்க்கெல்லாம்ஒருவளையும்விற்பதில்லை
கடன்தறேன்வளைகள்வள்ளிகடன்குடுத்தால் நீயெனக்கு
இடம்குடுப்பபாளுக்கால் கடன்குடுக்கதடயுமில்லை
ஆரென்றுஎண்ணியிந்த அபமானவார்த்தசொன்னாய்
எங்கஅண்ணமார்கள்கேட்டுவந்தால்அடித்துஉன்னைதுர

த்திடுவாள்

எவரென்றுஎண்ணியிந்தஇடும் பானவார்த்தசொன்னாய்

எங்கெயெனத்தார்கள் கேட்டுவந்தால் எளிசில்உன்னைவி

டவுமாட்டாள்

## 5—வது கட்டம்.

அந்திரத்யானமாய் மறைந்தார்

அந்தவேளை அந்தவேடர் எல்லாரும்

விந்தையாப்வேட்டையாட

வேடர்கள்வழிதன்னில்வந்தார்கள்

வரும்வழிதன்னி லந்தவேடர்கள்

வள்ளியெகாணேமென்று

மனதிலெஆவல்கொண்டு வேடர்கள்

வள்ளியிருக்கும் இடத்தில்வந்தார்

எங்ககுலக்குழந்தே இளமயிலே

எந்திழயேஉன்முகம் நொந்துஇப்போ

இருப்பானேன அதைஎங்களுக்கு

அறியவேஉரைசெய்யென்றார்

செந்தமலர்போலிருக்கும் உன்முகத்தில்

கௌதணிக்கங்கள்வருவானேன

தந்தைதாயார் அறிந்தால் எங்கள்மேல்

ரொம்பவும்கோபம் செய்வார்

தாசிமார் ஆரென்னும் உன்னை உதாசீனம்செய்தாரோ
காசுபணமில்லாமல்செற்றும்க்லேசங்கள் கொண்டாயோ
இப்படிக்குஇவர்உரக்கேகஇதைகேட்டு
இளம்பவள் வாய்திறந்து
தப்பிதங்கள் ஆரென்று செற்றும்
செய்திடவில்லைசந்தேகம் வேண்டாம்
இந்தவனம்தன்னிலே திணைகார்க்க வந்துவெகுநாளாச்சு
இந்தபுதுமையைபோல்இதுவரை
கண்டதில்லைஎன்னுட அண்ணமாரே
ஆரோஒருகிழவன்வெற்று அதிசயமாய்இருக்கான்
பாரில்இல்லாதவளைதோளில்சுமந்துகொண்டுவெய்யவேந
டந்துவாறான்
வளைகள்வாங்கிலேபெண்கள் பெண்களென்று
வாசலில்கூவிவர அதைக்கேட்டு
மகியுடன் ஆவலுடன் அவரை
அழைத்துவரச்சொன்னேன்
எந்தவூருஎந்ததேசம்வளைச்செட்டி
எங்கிருந்துஎங்கேபோறீர்
என்றுநான்கேள்க்கவுமே அவர்என்னைப்பார்த்து
ஒருஇடுப்பானவார்த்தைசொன்னார்
வடக்குவெகுதூரம் வள்ளிவளைவிற்ப்பேன வெகுகாலம்

பணத்துக்கு ஆறுவளை பைங்கிளியே விற்றுவறேன்
பாடிவளைகளென்று பணமில்லை வளைச்செட்டி நாழியுரி
தினைதறேனென்று சொன்னேன்
தினைவேண்டாம்எந்தன்மனம்இதம்போல்
நடந்தபானால்கனவளை தறேனென்று
இப்படி சகுஇவர் உரக்கெஇதைக்கேட்டு
மனமிகவருத்தங்க்கொண்டு
தப்பிதங்கள்சொன்னீர்எந்தன்தமயமார்
கேட்டுவந்தால்தண்டனைசெய்வாரென்றார்
குறகுலம்என்று அறியாமல்வள்ளி
இவன்கூவிவிட்டான் வார்த்தையை
மன திடுக்குகளினால்இதம்பால்
வேட்டயாயிமகிழ்ந்துவறோமென்று
அண்ணமார்போகியபின்வள்ளி அதிகலகிகளுடன்
விந்தையாய்வனம்தன்னில்செங்கிளி
வராமல்அந்தமாய்ஓட்டிவந்தார்

## 6—வது கட்டம்.

பச்சவளைகள்கலகலன்னவே பாங்கிமாருடனகூடியே
அச்சமத்தநும்இச்சயுடனே
ஆயல்ஆயல்என்றுஓட்டினாள்
வள்ளிஆயலாயலென்றோட்டினாள்

பக்ஷிபார்த்துபறவகள்போலெ ஜந்துக்கள் அதில்வாராமல்
போலெஜந்துக்கள் அதில்வாராமல்
கர்த்தனம்போலெ வாயைதுறந்துகார்த்துஆயலென்றோ
ட்டுனாள்
வள்ளிநார்த்து ஆயலென்றோட்டினாள்
சின்னகாடிசிறும்புலிதெனைபயர்இழுகாமலே
அந்ததெனைபயர்இழுக்கமலே
அன்னம்போலந்த வாயைதுறந்து ஆபலாய லென்றோ
ட்டினா
வள்ளிஆயல்ஆயலென்றோட்டினாள்
ஸரிகைகலவிக்கைஸ்தனத்தில் அணிந்துசங்கு மணிகள்பூ
ண்டாள்
வள்ளிசங்குமணி கள்பூண்டாள்
மாரில்காசுமலே அணிந்துமந்த ஹாஸமாய்ஓட்டினாள்
வள்ளிமந்தஹாஸமாய்ஓட்டினாள்
பக்குவகாலம்பருவமானேனெ பாலருடனேவள்ளியும்
சிறுபாலருடனெவள்ளியும்
பக்கங்கள்தெரியாத வனத்தில் வேடிக்கயாக நின்றோட்
டினாள்
வள்ளிவேடிக்கயாகநின்றோட்டினாள்
இந்தவிதமாயொகந்து வள்ளியும்மகிழ்ந்துதெனயெகார்

க்கயில்
அங்கேசம்கித்ந்துமெதனயேகார்க்கயில்
ஸுந்தரவடிவேலவனாரும்தோகமேல்காதலாய்வாருராம்
அவர்தோகமேல்காதலாய் வாருராம்

## 7—வது கட்டம்.

ஸ்கந்தர்மன திலமகில்கொண்டுவாடியே
கடுகிஇருக்கும்வள்ளி இடத்தில்நாடியே
ஹந்தயாய்வயஸ்ஸுசென்றவிருத்தனைபோலவே
அந்தமுடன்கால்பிடித்துவனத்தில்நாடியே
பழுத்தபழம்போலவடிபிடித்தவேலரும்
பாத்தவர்பிரேமிக்கும்படிவய்யவேவாருர்
தந்தங்கள்எல்லாம்உதிர்ந்து ஜாகளாச்சுதே
இந்ததேன்முழியாள் வள்ளிதன்னை தேடியேவாருர்
பக்தர்கள்பாபத்தை பரிஹரிக்கநாதனும்
கோவிந்தனைப்போல் வடிவுகொண்டுகூவியெவாருர்
வள்ளியென்றுபேர் படைத்தவள்ளிநாயகி
அள்ளியேமனம்வெறுத்தகள்ளிநீயடி
உந்தன் ஆசயிலே எந்தன்மனமுருகுதே
எங்கெதந்தமணம் செய்குவாயென்றுநோகுதே
இந்தவிதமாக ஸ்கந்தர்சிங்கமேலிந்த
சுந்தரியாள்வள்ளி தன்னை தேடியேவாருர்

## 8—வது கட்டம்.

பசிபசிஎன்றுசொல்லிபறந்து கொண்டுபாசாங்குகொண்
டு வள்ளியண்டயில்வந்தார்
பாசாங்குகொண்டு வள்ளியண்டயில்வந்தார்
பசிதீரஏதானும்கொடுப்பீர்எந்தன்
பிராணனிப்போதே தவிக்குமென்றார்
கண்ணைமிரட்டிஎந்தன் நாவிருளுதே
கானகம்தன்னிலெங்கும் சுற்றியேவந்தேன்
பெண்மயிலே உன்னைகண்டுவந்தேன்
என்னவாகிலும்கொஞ்சம் குடுங்கோளென்றார்
இப்படியாகப்சிதளர்ந்தவர்போல்
களதன்னில் அந்தனிலே படுத்துகொண்டார்
இத்தயறிந்து வள்ளிஸகிகளுடன்
ஏங்கிவிசாரத்துடன் ஏதுரப்பள்
எத்தனையோகோடி விருத்தர்களுண்டு
இப்படிபோல்ஒருபேரும் கண்டதில்லயே
மெத்தவும் அதிசயமாய் இருக்காரடி
இப்போதெதன்பிராணன் தவிக்குதடி
இப்படியாகவள்ளியும் ஸகிகளுடன்
ஏங்கிவிசாரத்துடன் சொல்லும்போது
தப்பெடுத்துவேடரெல்லாம் வேட்டயாடி

ஸந்தோஷமாகவனம் தன்னிலேவந்தார்

## 9—வது கட்டம்

வேடர்வரவுகண்டு வேலவனும்
வேங்கமரமாக ஓங்கிபோசெய்தார்
வேடர்வந்துசேதி சொல்லிபோனவுடனே
வேறொருவெஷமாகமாறநினைய்ந்தார்
பண்டாரக்கிழவனைப்போல்வடிவுகொண்டு
பாசாங்குகொண்டுவள்ளி யண்டையில்வந்தார்
பாதைதெரியாதெவனம் எங்கும்சுற்றியே
பசியால்வருத்தம்கொண்டுவாடிமெலிந்த
புசிதீர்க்கஒருபேரும் இல்லாமலே
பாதபிச்சுளதின் றுவரும்போது
எதிர்ச்சயாய்உன்னை யிங்கேதேடியேவந்தேன்
எதாஹும்கொடுத்து எந்தன்பசிதீரென்றார்
இந்தாவஜனங்களைகாதில் கேட்டு
இம்பமுடன்வள்ளியும் ஆலோசித்து
இந்தபண்டாரத்தின்பசிதீரவே
என்னுஹாரத்தைதரு அம்குடுத்திடலாம்
தெனைமாவும்தேனுமாகபக்குவம்செய்து
சைததில்ருசியாககுடுத்துடனே
அத்தைவாங்கிஆவலுடன்புசிச்சவரும்

அய்யனேஜாலங்கள்செய்கின்ருர்

## 10—வது கட்டம்

தாகமெடுத்துளந்தன்நாவுளருதெடி
தையபலாரேனென்று அய்யன்ஜாலங்கள்செய்தான்
தெனேமாவென்றுசொல்விஜீவன் போற்றுதெடி
திருட்டுதெனேமாவைகொடுத்து சேதியேதென்ருர்
பெண்டாட்டிபுள்ளகளெல்லா புலம்பிநிக்கவேஇங்கே
திண்டாட்டமாய்உன்கையினுல் ஜீவன்போகுதடி
வீடுவாசல்தன்னேவிட்டு கானகம்வந்தேனடி
பாதகியேஉன்கையினுல் பிருணன்போகுதடி
எந்தனயேராந்தன்கையால் காட்டிகுடுத்ததோர்
இதுக்கென்னசெய்வேன்தெய்வமே என்றுளழுந்து கூ
வினுள்
இப்படிக்குஇவள்உரைத்தசப்தத்தைக்கேட்டு 171454
அங்கேஇருந்தஸகிமாரெல்லாரும் ஒடியேவந்தாள்
பகிக்குதெனறுசொன்னயிந்த பண்டாரத்துக்குநீயும்
பச்சதினேமாவைகுடுத்து பக்குவம்செய்தாய்
ஆவல்மகிழ்ந்து அதைவாங்கிதின்றவர்போலெ
ஸகியேதாகம்தாகம் என்றுசொல்லிதவிக்குருரடி
எங்கயாவதுசெறைஇருக்கு மிடத்திலேபோய்
பண்டாரத்தின்தாகமதணிச்சுவாரேன்டிஎன்றுசொல்லி

எளமயில்போல்எழுந்து வள்ளியும்மிகதளர்ந்தவர்போல்
படுத்திருந்தபண்டாரத்தைபார்த்து உந்தன் தாகம்தீரு
மிப்போ
தண்ணீர் தருகிறேன் எந்தன்பின்னால்
வாருமென்றுஎழுந்துகூவினாள்
பண்டாரமும்தானுமாக போறவனத்தில் நின்னாய்செற
யில்இறங்கி
தண்ணீர்எழுந்துஎன்னுடன் என்னடியோபொண்ணே
வள்ளி
என்னையும்இப்போநீயும் இந்தசெறயில்இறங்க
தண்ணீர்எழுந்துசொன்னாயேஎழுந்திருக்கமாட்டாமலே
தெளிந்துஇருக்குதே இதில்இறங்கிஜலம்
உன்னதற்க்குஎன்னாலாற்றுமோ என்னவாகில்
உன்ஜாலத்தைஎடுத்துவெற்றுஜல்தியில்குடுத்தால்
எந்தன் தாகம்தீருமென்றார்

## 11—வது கட்டம்

என்னடபண்டாரம் உந்தன்வார்த்தையைநம்பினாலும்
இத்தனைபிரயாஸப்பெட்டுவ்யர்த்தமாய்ப்போச்சே
இந்தக்ஷணம்தண்ணீர் தந்தால்எந்தன் தாகம்தீருமென்று
தண்ணீர்தரபாத்திரத்துக்கு என்னசெய்குவேன்
வீடுமில்லை வேண்டியவர் ஆருமில்லையே இங்கேவெறும்

மையர்வந்துநின்று
எந்தனைபார்த்துதாகம் தீருகவைதன்னில் தண்ணீர்கொண்டு
வாயென்றுல்லாயர்த்துவான்; உந்தனைப்போல்கண்டதில்லையே
எத்தனையோபரதேசி கண்டுமிருக்கோம் எங்கள்வளவுகளில்வந்து
சோறுகேட்டுமிருக்காள் திருப்தியாகபசிகள்தீரகுடுத்திருக்கோம்
இந்ததேசத்தில்உந்தனைப்போலே கண்டதில்லையே
தாகம்தாகமென்று சொன்னாய் ஸத்யமென்றுஎண்ணிநானும்
தண்ணீராலும்முன்செறயில்வந்து காட்டினேன்
இத்தனைதூரம்நடந்து உனக்குஇந்தசிறயிலிறங்கதடம்இல்லையென்றாய் எண்ணடியோபெண்ணேவள்ளி
என்னையுமிப்பொநீயும் தண்ணீருண்ணசொல்லிகைப்பில்கொண்டு
தந்தாயோஎன்னசெய்வேன் கைகள் இரண்டுமெதடுமாறுதே
பொண்ணே எந்தன்வாயில்தந்தால் புண்ணியமுண்டோ
ஜனனமரணஸம்ஸாரம் தீரும் ஜகநாதன்மனதில்மோகம்

கொண்டவர்போலெ
ஜாலம்செய்துவள்ளியை லீலைசெய்யவே வேலர்சோகம்
கொண்டவர்போல்
மேனிதளந்து வாடிசொல்லு வாள் மயிலெண்ணிதோக
யேவள்ளிபொண்ணே
சுந்தரிபோல்உந்தன் திருகைய்யாலெடுத்துதந்தால்எந்த
ன் தாகம்தீருமென்று
உடனேவள்ளியும் தானும் அந்தவேலரை பார்த்துஎது
சொல்வாள்
என்னடபண்டாரம்நீயும் என்னுநினைந்தாயிப்போ
சின்னவளென்றுஎண்ணி வார்தைசொல்ல ஜயித்தாயி
ஆருமில்லைவேண்டியவர் என்றுநினைத்தாய்இப்போ ஆரி
ந்ததில்லையோ
குறகுலத்துவளமேமொள்ளமொள்ளவந்தாயெடபண்டா
ரமெநீ
இதைஇனிமேல்அறிந்துசொன்னால் எங்கள்தோழிமார்
சின்னபுத்தியானதினால்
உந்தன்பின்னாலெவந்தேன் நானும் சொன்ன சொல்லுக்
கெல்லாம் ஸம்மதிப்பேனோ
விருத்தர்கள்தேடியே விரிந்திபுலகில் அன்னம்வரிந்திடு
வார்

அத்தனையும் அறிந்த தில்லையே யாவனு வேவந்துதாகம்தாகு
மென்று
சொன்னையேஎந்தன்மேல் இந்தவா துசெய்யலாகுமோஎந்
தன்பிறுணன்போகுதே நீக்கமுடியாமல்வேலர்
மெத்ததளர்ந்துமேனிஎங்கிலும்முத்துமுத்தாகவேர்வை
சொரியே
செத்தியில்தவனைப்போலெவள்ளி தன்னைப்பார்த்து அந்
தக்ஷணம்தன்னில்
தந்தாலெந்தன்தாகம்தீருமென்றார்
இப்படிக்குஇவர்உரக்க எரக்கத்துடனேவள்ளியும்கள்ள
த்தனமென்று
அறிந்திடாமலே மொள்ளகய்யில்அள்ளி
வாரிகுடுத்தவுடனே ஸ்கந்தர்உல்லாஸமாய் ஏதுசெய்வர்
வள்ளிதன்மேலெ அன்புடன்ஜலத்தைஉண்டு
இம்பவேலரும்அதிசுந்தரிபோல்நின்றவள்ளிதன்மேலே
மோகித்துதாளாடிவிழுந்தவர் போல்மேலெவிழுந்தார்
ஜகனுதன் வனத்தில்மோஹம் கொண்டுசெய்தார்

## 12—வது கட்டம்

தள்ளாதவிழுந்தவுடன் சொல்லுவள்வள்ளியப்போசொ
ல்லுவள்வள்ளி
சாகவயல்ஸாச்ரு இன்னம்மோஹமென்னடா

தேகங்கள் தளர்ந்து போச்சேபோத மில்லயேசெற்றும்
போதமில்லயே
ம்கலியானவேலைகளை செய்தாய்நீயடா
பேச்சுஉளருதே உனக்காசைஎன்னடா உனக்காசையெ
ன்னடா
இச்சயில்லாபெண்கள்மேலெ உனக்கிச்சையென்னடா
என்னடாஉனக்கு இந்தவாதடாயின்னம்
இந்தவனத்தைவிட்டு இறங்கிவெளியில்செல்லடா
செல்லாபோனல் வந்தேன் வள்ளிசேதி சொல்லுறேன்
ஒருசேதி சொல்லுறேன்
அல்லும்பகலும்உன்னுடன் ஸல்லாபம்செய்யவே
காடுசெடியெல்லாம் கடந்துதேடியே வந்தேன்வள்ளிஉ
ன்னைத்தேடியேவந்தேன்
மோடியானவாடி மதனலீலைபொழுந்திட
உந்தனயேமாலையிடவந்தேன் வனத்தில்வள்ளிவந்தேன்
வனத்தில்
எந்தனையேமாலையிட வரிகிடலாமோஸ்கந்தர்
இந்தபேச்சுசொல்லகடந்து சொல்லுவள்வள்ளி கடந்து
சொல்லுவள்
உந்தன்தரமெல்லாம் எந்தன்பின்னே சொல்லாதேடா
விருத்தனையுன்னலெ என்னசெய்யலாகுமோ என்னசெ

ய்யலாகுமோ
இந்தவனத்தைவிட்டு இறங்கிவெளியில் செல்லடா
வெறுத்துவள்ளிசொல்லலுமே வெறுத்ததுடனே மெத்
தவெறுத்ததுடனே
எடுத்துசொல்லியும் இவள்மனதுளசங்கவில்லயே
புருஷனாயிருந்தால்நம்முட பூஜ்யம்வெளியிடும்நம்முடபூ
ஜ்யம்வெளியிடும்
தரிக்கவில்லயேஇதென்னஆச்சரியமென்றார்

## 13—வது கட்டம்.

எங்கள்ஸகியே நான்சொல்லுகுறேன்
ஸ்கந்தர்இன்னம் செய்தலீலகளை
மெத்தவும்ஆச்சர்யம் பட்டுகொண்டாரவர் 17/4/54.
புத்தியிலெண்ணிமகிழ்ந்து கொண்டார்.
மெத்தசிறியவளானாலும்வள்ளி
புத்தியிலேமிக சிறந்தவள்தான்
பார்தன்னில் இவள்போல்பெண்ணைநான்
பார்த்ததுமில்லை இதுவரையில்.
என்னதைரியம் இவளுக்கென்று
நன்றாய்யோஜனை பண்ணிக்கொண்டாள்
என்னபுத்தியிருந்தாலும் வள்ளி
சின்னகுழந்தை ஆனதினால்,

எத்திகொண்டேபுணம் ஆனுக்கால்வள்ளி
சேத்தாகிலும் ஸம்மதித்திடுவாய்
இப்படிக்கு இவர்ஆலோசித்துஇன்னம்
சொல்லுவள்வள்ளி தன்னைப்பார்த்து.
குறைமாதே வள்ளிபெண்ணே நீமெத்த
குழந்தையென்று எண்ணிநான் கேள்க்குகுமீறன்
தனித்துஇந்த வனம் தன்னிலே
தினைபயிர்கார்க்குற வேளயிலே.
எத்தனையோ துஷ்டமிருகங்களுண்டு
மெத்தவனம்தன்னில் வந்திடுமே
செற்றஅதுகளை கண்டாக்கால்உன்
தேகமெல்லாம் புல்அறிந்திடுமே.
உனக்குஅதைகண்டால் பயமில்லயோ
உள்ளத்தைஎன்னிடம் சொல்லுமென்றார்
அதைக்கேட்டுவள்ளியும் சொல்லுகின்றாள்
எனக்கிப்போஒன்றுக்கும பயங்களில்லை.
எந்தமிருகங்கள் வந்தாகிலும்
கவிண்கள்அணஞ்சுநான்ஒட்டிடுவேன்
ஆனைஎன்றொரு மிருகம்உண்டுஅதை
மனதில்நினைந்திட மாட்டேன்கண்டால்.
கால்களும்தெடு மாறும்கனவிலே

நான்ஸ்மரித்திட மாட்டேன்
இந்தவிதம் வள்ளிபுலம்பும்போது
ஸ்கந்தர்மகிழ்ந்து ஸந்தோஷம்கொண்டார்.
இனிமேல்நமுக்கு விசாரமில்லே
இந்தகன்னிகயை மணம்செய்திடலாம்
ஆனக்குபயமென்று சொன்னபோதெ
நம்முட அண்ணர்வந்தாலப் போபயமில்லயோ.
என்றுநம்மண்ணரை வரித்திடலாம்
என்றுநன்றாய் யோஜனைபண்ணிக்கொண்டு
அவர்காணுமல் மறஞ்சுவிட்டார்
கானகம்தன்னி லந்தவேலவரும்.
சென்றுகண்கள் இரண்டேன்மூடி
கருத்தினயாம் தரிகணபதியே
வந்தான்கரிமுகன் மதவானயாய்
வள்ளியெவந்து மிரட்டிடென்றார்.

## 14—வது கட்டம்.

பார்த்துவள்ளிமதவானை தன்னேனன்பதறி கால்கள்இதடு மாறி
வேற்த்துமேனியெல்லாம் தளர்ந்துவிழுந்தாள்
மூர்ச்சவனம்தன்னிலெ விழுந்தவுடன்
கணபதியும்மறஞ்சுவிட்டார் வனம்தன்னிலெ

எழுந்துவள்ளிமனம் தெளிஞ்சு இருக்கும்போது
அந்தவேளைமறுபடியும் மதவானை வள்ளியைமிகமிரட்டி
வர
ஒருபேர்களையும் காணோமென்று ஓடினாள்வனம்தன்னி
லெங்கும்
குஹைக்குள்ளே வள்ளிபோய் நுழையமதவானை அங்கே
ஓடிவர
பொடிபொடியாக குஹைதன்னைன்,நொடியில்காலாலே
தள்ளிவிட்டது
தள்ளிவிட்டவுடன் வள்ளிபார்த்துஇதுவென்னமாயமோ
வென்றுநினைத்து
தன்னாலேவந்தகப்பட்டதில் தப்புவதேதும்மில்லையென்
றாள்
மதவானைக்கிரயா கஸகிமார் களையெல்லாம் விட்டுதுணியு
டன்இங்கேவந்தேதாம்
என்றுவனத்துக்காகவே ஓடிவறாள்
வரும்வழியில்ஒருகிழவன் மறவாகதான்
இருந்துகொண்டு ஜபம்பண்ணுகிறத்தைபார்த்து
மனம்தெளிஞ்சு ஓடிவறாள்.
வள்ளிஓடிவரும்வரவுதன்னைப்பார்த்துவேலரும்அப்போ
ஏதுசொல்வார்

ஏதுக்குபொண்ணே இங்கெவருய் என்னத்துக்காகபயந் துவருய்
என்றுசொல்லிவேலர்கேள்க்கலுமேஇளமயில்போல்வள் ளிவாய்துறந்து
மதவானைக்குபயந்துவறேன் கதிவேறில்லை உன்பாதமெ ன்ருர்

## 15—வது கட்டம்

கேட்டுவேலவர்நகைத்துகெடுத்தாயேபொண்ணே இப் போழுதே
மதவானைஇங்கே இடமறிந்தால் அரநொடிக்குள்வந்திடு மே
ஆனையென்னைதேடிவருமே ஓடியிங்கே நுழைந்துக்கொ ள்ளு
பாதுகள்செய்யாதெயென்று வருவதற்க்கு முன்னேசெ ல்லென்ருர்
இந்தவிதம்வேலர்சொல்ல சிந்தயில்வருத்தம்கொண்டு
திரும்பியேபாருக்கும்போது ஆனையும்வனங்களெல்லாம் தேடியே
கோபத்திடனே வருதும் போதுகண்டு வள்ளிமனம் நடுங்கி
செறியான்என்னைக்காருமென்று கட்டிக்கொண்டாள்

பார்த்திவேலர்பரிஹாஸமாய் வார்த்தையுமப்போதுஎது
சொல்வர்
நேர்த்தியோஇதுவோ பெண்ணேசேர்த்துஎன்னைவந்து
கட்டிக்கொண்டாய்
சிறுபெண்ணாகஇருந்து கொண்டுகிழவனைவந்துகெட்டி
க்கொண்டாய்
பயமுனக்கிப்போது இல்லயோ பார்த்தவர்நகைசெய்யா
ரோ
இந்தவிதம்வேலர்சொல்லசுந்தரிவள்ளி ஏதுசொல்வள்
எந்தவிதத்தாலும்எந்தனைகொன்றிடாமல்காப்பாத்திடும்
உந்தனையிப்போகாப்பர்ததிஞல் எந்தனுக்கென்னசெய்
திடுவாய்

## 16—வது கட்டம்

ஆனையைமிரட்டிவிட்டாயே வள்ளிபெண்ணே
ஆத்துக்குநீபோயிடுவாயே வள்ளிபெண்ணே
எந்தனையேமாலயிட்டால் வள்ளிபெண்ணே
உந்தனையிப்போகாப்பாத்திடுவேன் வள்ளிபெண்ணே.
இந்தவிதம்வேலர்சொல்ல ஏஜகதீச
சுந்தரிவள்ளிஏதுசொல்வள் ஏஜகதீச
ஏவல்செய்வேன்உம்மைவிட்டு ஏஜகதீச
எப்போதும்நான்பிரியேன் ஏஜகதீச.

இந்தவிதம்ஆலோசித்து ஏஜகதீச
சுந்தரிவள்ளியப்போசொல்வள் ஏஜகதீச
மதவாலைக்கிரயாகாமலே ஏஜகதீச
கிழவனை மாலயிட்டாலென்ன ஏஜகதீச
இந்தவிதமாகசொல்வள் ஏஜகதீச
ஏதுருதிசெய்திடுவாயே வள்ளிபொன்மீனா
ஸத்தியமாய்சொன்னதினால் ஏஜகதீச
சேற்றும்சந்தேகங்களில்லை ஏஜகதீச
தனித்துவிட்டார்வனம்தன்னிலே ஏஜகதீச
மறைந்துவிட்டார்வனம்தன்னிலே ஏஜகதீச

## 17—வது கட்டம்

தனித்துவிட்டார்வனம் தன்னிலேஷண்முகரும் வள்ளி தன்னுடனே
ஆனையைகாணுபல் வள்ளிஆலோசனைசெய்கிறாள்
மாதவனைகாணோமேயென்று கிழவனுக்குவாக்குசொன்னோமே
வாக்குசொல்லிவிட்டோம்இவருடனேகார்ப்பவரேன்கதி காணோமே
வடிவேல்முருகா வந்தருள்செய் இந்தகிழவன்என்னை மணம்செய்யாமல்
இந்தவிதம்வள்ளி புலம்பும்போது ஸ்கந்தர்மகிழ்ந்து லம்

தோஷம்கொண்டார்
ஸ்வயரூபத்தைகாட்ட வேணமென்று மனதில்எண்ணம்
கொண்டேனே
திருகாத்தில்வடிவேல்பிடித்து திருதியாய் அன்புடன்கரு
ணையென்று
பார்த்துவள்ளிமகிழ்ந்தபடி பன்னீர்கண்ணுடன் எதிர்த்
துநின்று
கண்டுவள்ளி மனம்களித்து கைகள் இரண்டேன்கூப்பி
ஸ்துதிசெய்தாள்

## 18—வது கட்டம்.

தேவர்கள்சிறைபிடித்ததேவாதிதேவ
மூவர்க்குமுதலான ஸ்ரீமுக்கண்ணரேநீர்
ஸத்சிதானந்த சாச்வதஸ்வரூபனே
பக்தர்கள்பராதீனனே பார்வதிபாலகனே.
சிறியோன்செய்தபிழையை பொறுத்தருளும்ஜகனுதா
திருகாத்தில்வடிவேல்பிடித்ததேவனேஜகனுதா
இந்தவிதமாகசிந்தை மகிழ்ந்துவள்ளிஸ்துதிக்க
ஸ்கந்தரும்கேட்டுமனம்மகிழ்ந்து சொல்லுவர்.
இத்தனைநாளாகஉன்னை இச்சைகொண்டுவந்தே
இத்தருணம்தப்பாமல் நாமள்இருபேருமாய்கூடி
சுந்தரியேநாமள் வனம்ஸுகமாய்வாஸம்செய்வோம்

போவோம்இருபேருமாக புஷ்பவிமானமேறி
சந்தனவிருக்ஷம் நிறைந்தசெம்பகவனம்தன்னில்
சல்லாபமாய்நாமள் இங்கேஸம்மதிப்போமானல்
சுந்தரியேநாமளிங்கேஸுகமாய்வாஸம்செய்தால்
செந்தூர்தன்னில்எந்தனையவாள் தேடியேவருவாள்
ஆகயினல்நாமள்வள்ளி அரக்ஷணம்பிரியாமல்
போவோம்இருபேருமாக புஷ்பவிமானம்ஏறி
இந்தவிதமாக இருபேரும்விமானம்ஏறி
செந்தூர்தன்னில்வந்து ஸுகமாய்வாஸம்செய்தார்.
உந்தன்திருமகிமைதன்னேன் உகந்துஸ்துதிசெய்வேன்
எந்தனுக்குகிருபைதாரும் இடும்பணியேசரணம்

## 19—வது கட்டம்.

சரவணபவகுகனே சரணம்
ஷண்முகனுதா உன்சரணம்
ஆறுமுகவேலா உன்சரணம்
லோகாம்பிகைபாலாசரணம்
கரிமுகக்கிளையோனே சரணம்
கல்யாணரூபா சரணம்
காலபயாந்தியா சரணம்
லோகாம்பிகைபாலா சரணம்
தெய்வானைக்கணவா சரணம்

சேனாதிபதியே உன்சரணம்

## 20—வது கட்டம்.

பாலசுப்பிரமண்யன் செய்தலீலைஎன்னசொல்வேன்
கானகத்தில்வள்ளியை கல்யாணம் செய்துகளித்திட
எனத்தார்கள்இல்லாதெ வள்ளிதனித்திருக்கும் வேளை
யில்
வனத்தில்வந்துமாலையிட்ட வடிவேலர்க்குமங்களம்
மான்விழியாள்வள்ளிதன்னோன் மையல்கொண்டுபோ
னதோர்
ஏகலோகநாதருக்கும் வேலருக்கும்மங்களம்
கானகத்தில்மொட்டிவிட்ட கணபதிக்கு மங்களம்
கல்யாணம்செய்யவந்த வடிவேலர்க்கு மங்களம்.

வள்ளியம்மன் சோபனம்.

முற்றிற்று.

# வி ம்பரம்.

விற்பனைக்குதயாருயிருக்கும் பாட்டுபுஸ்தகங்கள்,

| | | | |
|---|---|---|---|
| பக்தர்கள்ஸ்துதி | 0 | 1 | 0 |
| காலடிப்பாட்டு | 0 | 1 | 0 |
| லலிதாம்பாள்சோபனம் | 0 | 2 | 0 |
| ஷடிதேவீபாடத்துடன் | 0 | 5 | 0 |
| கல்யாணக்கும்மி | 0 | 1 | 0 |
| துரோபதைசரித்திரக்கும்மி | 0 | 1 | 0 |
| துருவசரித்திரக்கும்மி | 0 | 1 | 0 |
| நெலவ்குபத்தியம் | 0 | 1 | 0 |
| லாலிஊஞ்சல் | 0 | 1 | 0 |
| துலாபாரக்கும்மி | 0 | 1 | 0 |
| பாரிஜாதநாடகக்கும்மி | 0 | 1 | 0 |
| சுபத்திராகல்யாணக்கும்மி | 0 | 1 | 0 |
| காப்பிக்கும்பழயத்துக்கும்சண்டை | 0 | 0 | 9 |
| கல்யாணசௌகந்திகம் | 0 | 1 | 0 |
| அம்பரீஷசரித்திரம் | 0 | 1 | 0 |
| சாகுந்தளம்சோபனம் | 0 | 1 | 0 |
| கல்பாத்திதேருப்பாட்டு | 0 | 1 | 0 |
| கருடகர்வபங்கம் | 0 | 1 | 0 |
| இராதம்கோடணம்பாட்டு | 0 | 1 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அனந்தன்காடு | 0 | 2 | 0 |
| குசலவவாக்கியம் | 0 | 3 | 0 |
| வால்மீகிராமாயணம் | 0 | 3 | 0 |
| பார்வதிஅம்மன்சோபனம் | 0 | 3 | 0 |
| வேதாந்தப்பாட்டு | 0 | 2 | 0 |
| பஞ்சீகரணமஹாவாக்கியம் | 0 | 4 | 0 |
| ஷடிகட்டம் | 0 | 0 | 6 |
| ஸாவித்திரிபாடம் | 0 | 1 | 0 |
| காவடிச்சிந்து | 0 | 1 | 0 |
| அரிச்சந்திரவிலாசம் | 0 | 1 | 0 |
| லட்சுமிக்கும்பார்வதிக்கும்வாக்குவாதம் | 0 | 0 | 3 |
| நாமராமாயணம் | 0 | 0 | 3 |

மேல்விலாசம்:

வெங்கடாசலசாஸ்திரி

வித்யாகல்பதரு பிரஸ்

கல்பாத்தி பாலக்காடு